ESOFT

*The Leader in Professional ICT Education*

# 21ம் நூற்றாண்டின் அபிமானமிக்க தொழிலுக்கு பிரவேசிக்கும் பாதை



தகவல் தொழில்நுட்ப தொழிற்துறையில் வெற்றி பெற உங்களுக்கு பாதை திறந்துவிடும் நோக்கில் இக்கைநூலை நாங்கள் மனமுவந்து அளிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**டாக்டர் தயான் ராஜபக்ஷ,**
M.Sc. , MBBS, MBCS, CITP, MIEEE, MCS (SL)

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரபல விரிவுரையாளர்.
முகாமைத்துவ பணிப்பாளர் (Esoft கம்பனிகள் குழுமம்)
கௌரவ தலைவர் - இலங்கை கணனி சங்கம்.

தற்போதைய சமுதாயத்தின் புதிய சிந்தனையாக தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறைக்கு பிரவேசிக்கும் இளம் சமுதாயத்தினரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கின்றது. எனினும் இத்துறைக்கு வரும் பெரும்பாலானோர் தமது இலக்குகளை அடைய முடியாமல் இருப்பதைக் கவலையுடனேனும் அறிவிக்க வேண்டும். சிலர் இத்துறையில் கல்வி பெறும் போது இடைநடுவில் அதனை நிறுத்தி விடுகின்றனர். இன்னும் சிலர் போதிய ஆற்றல் இன்மையால் எதிர்பார்த்த மட்டத்தினாலான தொழிலொன்றைப் பெறத் தவறி விடுகின்றனர். அவ்வாறாவதற்கு பிரதான காரணம் இவர்களுக்கு இத்துறை குறித்த போதிய அறிவின்மையும் அவர்களுக்கு வழிகாட்டக்கூடிய பொருத்தமான முதியவர்கள் அப்பகுதியில் இல்லாமையுமாகும்.

கடந்த 12 வருட காலமாக தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறைக் கற்கையில் புதிய சரித்திரம் படைத்த எமது நிறுவனத்திற்கு உங்களை சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டிய சமூகப் பொறுப்பு உள்ளது. அதனை புரிந்து கொண்ட நாம் இக்கைநூலை உங்களுக்கு இலவசமாக பெற்றுத் தர எண்ணியுள்ளோம்.

அதி உயர் தரத்திலான டிப்ளோமாப் பாடநெறிகளுடன் உள்நாட்டு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பட்டப்படிப்புகளும் எம்மிடம் உண்டு. மிகக் குறைந்த முதலீட்டில் இப்பாடநெறிகளைப் பயில முடியுமாக இருப்பதும் அகில இலங்கை ரீதியாக 37 கிளைகளைக் கொண்டுள்ளமையும் ESoft இனது தனித்துவமாகும்.

**இலங்கையில் மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப கல்வி வலையமைப்புடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தகவல் தொழில்நுட்ப தொழில் துறை தொடர்பாக நீங்கள் அறிந்த விடயங்கள்


### விரிவுரையாளர் பிரசன்ன லொகுகே

Ph.D (Aus), M.Sc (Comp.Sc), PG Dip (Comp.Tech), B.Sc, PMP (USA), MPMI (USA), MACS (Aus), MBCS (UK), CITP (UK), MCS (SL)

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரபல விரிவுரையாளர்
தகவல் தொடர்பாடல் போதனாசிரியர்
-ஆசிய அபிவிருத்தி வங்கி

- CMA-CGM, Hong Kong

முந்நாள் கௌரவ தலைவர் -இலங்கை கணனி சங்கம்.


நிகழ்காலத்தில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் தொழில்களுக்கு உயர் மட்டத்திலான வரவேற்புகள் காணப்படுகின்றமை நாம் யாவரும் அறிந்த விடயம். சிலர் இத்துறைக்கு 21 ஆம் நூற்றாண்டின் தொழில் என்று கூட கூறுவதற்கு முன்வந்துள்ளனர். இதன் காரணமாக இத்தொழிலில் ஈடுபடும் இளம் சமுதாயத்தினரை பெருவாரியாக் காண முடியும். இவ்வாறு தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறைக்கு இவ்வளவு கேள்வி ஏன் ஏற்பட்டுள்ளது? இத்துறையில் காணப்படும் தொழில் வாய்ப்புகள் எவை? இத்துறையை வெற்றி கொள்ள எமது இளம் சமுதாயத்திருக்கு வழி காட்டுவது எவ்வாறு? இவ் அடிப்படை வினாக்களுககான விடையை எனது அனுபவம மூலம் உங்களுக்கு இவ்வாறு எழுதி முன்வைக்க விரும்புகிறேன்.

### தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறைக்கு இவ்வளவு கேள்வி ஏற்பட்டுள்ளது ஏன்?

உலகமயமாக்கல் உடன் ஏற்பட்ட போட்டிமனப்பான்மையை வெற்றி கொள்ள நிறுவனங்களுக்கு மிகவும் செயற்திறன் மிக்க உயர் தரத்தில் தமது பொருள் மற்றும் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியது அத்தியாவசியத் தேவையாக மாறியது. அத்துடன் தமது நிறுவனங்களை உலகம் முழுவதும் வியாபிக்க வைத்து அவற்றை சிறந்த முறையில் முகாமைத்துவப் படுத்துதலும் இதனுடன் ஏற்பட்ட மற்றுமோர் சிறப்பம்சமாகும். நாம் அனைவரும் அறிந்த விதத்தில் கணனி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தினால் இவ்வாறு உலகம் முழுவதும் பரவியுள்ள நிறுவனங்களை ஓரிடத்திலிருந்து செயற்திறன்மிக்க வகையில் முகாமைத்துவப் படுத்த முடியும். இன்றைய காலகட்டமானது வங்கிச் சேவைகள், கல்விச் சேவைகள் போக்குவரத்து சேவைகள், தரமுயர்ந்த வியாபார நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள் மட்டுமன்றி கைத்தொழில் நிறுவனங்கள் கூட தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை பயன்படுத்தி தங்கள் வேவைகளை மிக்க செயற்திறனான முறையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு எந்நேரமும் முயற்சி எடுக்கின்றன. மேற்குறிப்பிட்ட போட்டி நிலைமை காரணமாக ஒவ்வொரு நிறுவனமும் தமது எதிர்த்தரப்பினரை விட சிறந்த சேவையை தமது வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் மற்றும் அது சார்ந்த தொழிநுட்பங்களை பயன்படுத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதற்காக கையடக்கத் தொலைபேசி (Smart Phone) மற்றும் இணையப் பாவனை போன்றவற்றையும் சம்பந்தப்படுத்திக் கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அதன் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்கான பாரிய கேள்வி எழுந்துள்ளது. மற்றைய துறைகளுடன் ஒப்பிடுகையில் இத்துறையிலுள்ள சிறப்பம்சமானவது தகவல் தொழிநுட்ப தொழிலாளர் ஒருவருக்கு பல்வேறுபட்ட நிறுவனங்களிலும் தொழில் வாய்ப்பு கிடைக்கப் பெறுவதற்கான சாத்தியம் அமையப் பெற்றுள்ளது. மற்றுமோர் துறையான வைத்தியத் துறையை எடுத்துக் கொண்டோமாயின் வைத்தியரொருவருக்கு அரசாங்க அல்லது தனியார் மருத்துவமனையொன்றில் மட்டுமே தொழில் செய்ய முடியும். தகவல் தொழிநுட்பவியலாளருக்கு தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிறுவனங்களை பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டலாம்.

1. தகவல் தொழிநுட்பத் துறைசார் நிறுவனங்கள். (IT Companies)
   உதாரணமாக: மென்பொருள் தயாரிக்கும் நிறுவனங்கள்)
2. தகவல் தொழிநுட்ப துறைசாரா நிறுவனங்கள். (Non-IT Companies)
   உதாரணமாக: நிதி நிறுவனங்கள், கைத் தொழில் நிறுவனங்கள், வைத்தியசாலைகள்)
3. அரசாங்க நிறுவனங்கள். (Government)
   உதாரணமாக: அமைச்சரவைகள், திணைக்களங்கள்.
4. தகவல் தொழிநுட்ப கற்பித்தல் பயிற்சி நிறுவனங்கள். (IT Training Companies)
5. தகவல் தொழிநுட்பம் ஊடாக சேவை வழங்கும் நிறுவனங்கள். (BPO Companies)

இத்தகைய பல்வேறுபட்ட நிறுவனங்களும் தகவல் தொழிநுட்பவியலாளர்களை சேவைக்காக இணைத்துக் கொண்ட காரணத்தால் கடந்த ஆண்டுகளில் இத்துறையில் தொழில் புரிவோரின் எண்ணிக்கையில் கணிசமான வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனத்தின் (ICTA) ஆய்வொன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்வரும் வரைபின் மூலம் இவ்விடயம் எமக்கு தெளிவாகிறது.





**Figure 1 : Overall IT Workforce Growth Trend 2003 - 2010**

2015 ஆம் ஆண்டு ஆகும்போது இத்துறையில் தொழில் வாய்ப்பை பெறுவோரின் எண்ணிக்கை 100,000 இனை விட மேற்பட்டதாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இத் தகவல் தொழிநுட்பத் துறையில் காணப்படும் தொழில்வாய்ப்புகள் எவை?

இன்று தகவல் தொழிநுட்பம் எனும்போது வெறுமனே ஒரு தொழில் வகையை மட்டும் சார்ந்த துறையொன்றல்ல. மாறாக அது பல்வேறுபட்ட துறைகளிலும் வியாபித்துள்ள விரிவான விடயப் பரப்பாகும். இத்துறையிலுள்ள தொழில்களை பின்வரும் முறையில் வகைப்படுத்திக் காட்டலாம்.

### மென்பொருள் தயாரிப்பு சார்ந்த தொழில் வாய்ப்புகள்

- Programming & Software Engineering
- Project & Programme Management
- Software Quality Assurance
- Business Analysis & System Integration
- Solution & Technical Architect
- Technical Writing

### கணனித் தொகுதி நடாத்திச் செல்லுதல் சார்ந்த தொழில் வாய்ப்புகள்

- Systems and Network Administration
- Database Administration and Development
- Technical Support
- Management Information Systems / IT Management

### கிராபிக் மற்றும் இணையப் பக்கங்கள் வடிவமைப்புச் சார்ந்த தொழில் வாய்ப்புகள்

- Digital Media and Animation
- Web Design and Development

### வன்பொருள் வழங்குனர் சார்ந்த தொழில் வாய்ப்புகள்

- IT Sales and Marketing
- Hardware Technical Support

### ஏனைய தொழில் வாய்ப்புகள்

- IT Lecturing
- BPO Services
- IT Research and Development

மேலே நாம் குறிப்பிட்டுள்ளது தொழில் வகைகள் மாத்திரமே இவ் ஒவ்வொரு வகையிலும் பல்வேறுபட்ட பதவிகள் உள்ளதென்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

இவ் ஒவ்வொரு தொழில்களுக்கும் பல்வேறு நிறுவனங்களும் எதிர்பார்க்கும் மிகக் குறைந்த தகைமைகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Most Frequently Requested Minimum Academic Qualification

| Job Category | Minimum Academic Qualification | | | |
|---|---|---|---|---|
| | BPO | IT | Non IT | Government |
| Database Administration & Development | Higher Diploma | Bachelors Degree | Higher Diploma | Bachelors Degree |
| Digital Media & Animation | Diploma | Higher Diploma | Diploma | |
| Business Analysis & Systems Integration | Bachelors Degree | | | |
| Systems & Network Administration | Higher Diploma | Bachelors Degree | Diploma / Higher Diploma | Bachelors Degree |
| Programming / Software Engineering | Bachelors Degree | | Higher Diploma | Bachelors Degree |
| Project & Programme Management | Bachelors Degree | | | |
| Software Quality Assurance | Bachelors Degree | | Higher Diploma | N/A |
| IT Sales & Marketing | Diploma / Higher Diploma | Diploma | | N/A |
| Technical Support | Diploma/Higher Diploma | | Diploma | Bachelors Degree |
| Technical Writing | Higher Diploma | Bachelors Degree | Diploma | N/A |
| Web Development | Diploma | Higher Diploma | | Higher Diploma / Bachelors Degree |
| MIS / IT Management | Bachelors Degree | | | |
| Solutions & Technical Architect | Bachelors Degree | | | |
| IT Research & Development | Bachelors Degree | | | |

**இக்குறிப்பும் ICTA ஆய்வினால் பெறப்பட்டதாகும்.**

### எமது இளம் சமுதாயம் இத்துறையில் வெற்றிபெற வழி தேடிக் கொள்வது எவ்வாறு?

நீங்கள் மேற்படி தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான ஆகக் குறைந்த தகைமையை கொண்டிருக்க வேண்டும். மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு பெரும்பாலும் நல்லதோர் தொழிலுக்கான குறைந்த தகைமை தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு ஆகும். (Bachelors Degree) அல்லது உயர் டிப்ளோமா பாடநெறி ஆகும். (Higher Diploma) எனது கருத்துப்படி தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான ஆகக் குறைந்த தகைமையை ஒருவர் கொண்டிருத்தல் போதுமாகாது. தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக ஒருவரிடம் இருக்க வேண்டிய மூன்று விடயங்கள் முக்கியமானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆகக் குறைந்த தகைமை (Minimum Qualifications)
2. மிக முக்கியமான ஆற்றல் (Essential Skills)
3. சவால்களை வெற்றிகொள்ளத் தேவையான உறுதியான மனப்பாங்கு

உங்கள் யாவருக்கும் விளங்கும் வகையில் மேற்படி விடயங்களை கொண்டிருக்க முடியுமாவது முறையான கல்வியொன்றின் மூலம் மட்டுமே. இதற்காக கற்பித்தல் நிலையமொன்றைத் தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்கள் குறித்து நீங்கள் கவனத்திற் கொள்வது மிக முக்கியமாகும்.

1. நிறுவனத்திற்கு சமூகத்தில் மற்றும் அத்துறையில் இருக்கும் வரவேற்பு
2. நிறுவனத்தினால் வழங்கப்படும் தகைமைகளின் செல்லுபடியாகும் தன்மை
3. நிறுவனத்தின் நிதி நிலைமை (தொடர்ந்து நடாத்தக் கூடிய)
4. ஆசிரியர் குழாமின் தகைமை மற்றும் அனுபவம்

சிறந்த நிறுவனமொன்றினால் தமக்குப் பொருத்தமான பாடநெறி ஒன்றை தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்வது முக்கியம்.

1. பாடநெறியின் உள்ளடக்கம் மற்றும் அதற்கான வரவேற்பு.

2. தனக்குரிய எதிர்காலத் தொழில் இலக்கு.

3. பாடநெறிக்காக செலவழியும் கட்டணத்தை முதலீடு செய்வதற்கான வசதி.

25 வருட காலத்திற்கு மேலான எனது தகவல் தொழில்நுட்ப வாழ்வின் அனுபவத்தின் மூலம் இக்குறிப்பினை எழுதுவதற்கு நான் தீர்மானிக்கக் காரணம் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு நுழையும் புதியவர்களான உங்களுக்கு இதன் மூலம் யாதுமோர் விளக்கம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலாகும். எதிர்காலத்தில் இத்துறையில் பாரிய அளவில் ஏற்படவுள்ள சந்தர்ப்பங்களினால் (Opportunities) ஆகக் கூடிய பலனை நீங்களும் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## E-soft மூலம் தகவல் தொழில்நுட்ப துறையில் வெற்றி பெற்ற தசுன்

"நான் 2010ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக BIT வெளிவாரி பட்டப்படிப்பில் முதல்தர சித்தியுடன் சித்தி பெற்று தொகுதி முதல் இடம் மற்றும் பேராசிரியர் பீ.கே. சமரநாயக நினைவு தங்கப்பதக்கத்தையும் பெற்றுக் கொண்டேன். தற்போதைக்கு நான் மிகவும் வெற்றிகரமாக தகவல் தொழில்நுட்ப தொழிலில் ஈடுபட்டு ESOFT கம்பஹா கிளை நிறுவனத்தின் முகாமையாளராக கடமை புரிகிறேன்."

**தசுன் நிலன்ஜன**

"கற்றல் முற்கிளை" "அதன் பலன் பூக்கொத்து" எனது சிறு வயது முதல் எனது வகுப்பில் ஒட்டியிருந்த இவ்வறிவித்தல் இன்று என் முன்னிலையில் நிஜமாகி இருப்பது எனது வாழ்க்கையினாலேயே எனக்கு படிப்பினை ஊட்டியே. கற்பதே எதிர்காலத்தை சிறப்பாக்கும். அது எனது வகுப்பாசிரியையான எனது தாய் என்னை கற்பித்தலில் ஊக்குவிக்க சொன்ன வார்த்தை. "ஆ... பிள்ளைகள் இப்ப சொல்லுங்கோ பெரியவர் ஆகினா யாராக வர விருப்பம்" அன்று முன் வரிசையில் இருந்து பெறுமையுடன் எழுந்து முடியுமான அளவு கையை மேலுயர்த்தி நான் கூறினேன் "நான் பெரியவன் ஆகினால் வைத்தியராகுவேன் என்று" அக்கனவில் என்னைவிட எனது பெற்றோர் வாழ்ந்தனர் என்பதை நான் கூறவேண்டும்.

அவர்கள் காட்டிய இலக்கை நோக்கி அவர்கள் காட்டிய வழியில் நான் பயணிக்கின்றேனா என்று எப்பொழுதும் அவர்கள் தேடிப்பார்த்தனர். நாம் சிறுவயதில் நுவரெலிய மாவட்டத்தில் சிறிய கஷ்டப்பிரதேச ஊர் ஒன்றில் வசித்தோம். நான் ஐந்தாம் ஆண்டு பரீட்சை எழுதும் போது மின் குமிழை பார்த்திருந்தது பத்திரிகைகளில் மட்டுமே. தொழில்நுட்ப உபகரணமென நான் பயன்படுத்தியிருந்தது மின்சூழ் விளக்கு மற்றும் மின்கலத்தினால் இயங்கும் சிறிய அளவிலான கருப்பு வெள்ளை தொலைகாட்சிப் பெட்டியொன்றை மட்டுமே. அத்தகைய சிரமங்கள் மத்தியிலும் எனது பெற்றோர் முயற்சி என்ற மனஉறுதியுடன் முன்னேறிச் செல்ல முன்னின்று எனக்கு வழிகாட்டினர். அதன் பிரதிபலனாக 1996 ஆம் ஆண்டு கண்டி "ரணபிம ரோயல் கல்லூரியில்" கல்வி பெற எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. எரியும் மின்விளக்கு மற்றும் மின்சாரத்தினால் இயங்கும் பல்வேறுபட்ட உபகரணங்களும் எனக்கு புதியனவாக இருந்தாலும் புத்துணர்வு ஊட்டின.

அவை மத்தியிலிந்த ஓர் சாதனம் என் வாழ்வின் எதிர்காலமாகும் என அன்று நான் கனவிலேனும் நினைக்காதவிடத்தும், கணனி தகவல் தொழிநுட்பத்தின் அரிய சாதனம் அது இன்று எனது வெற்றியின் துணையாளன் மட்டுமன்றி எனது தொழிலாகவும் மாறிவிட்டது. அது எனதோ எனது பெற்றோர்களினதோ கனவாக இருக்கவில்லை. மாறாக அது அதிர்ஷ்டத்தின் ஆச்சரிய செயலாக இருக்கவில்லை. இவ்வெற்றியின் கதை நாளை உலகை பாரமெடுக்க இருக்கும் எனது சகோதர பரம்பரைக்கு வாழ்க்கையை வெற்றிகொள்ள பெரும் உதவியாக முன்மாதிரியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் க.பொ.த உ/த பரீட்சைக்காகத் தெரிவு செய்தது விஞ்ஞானப் பிரிவையாகும். எனது பெற்றோர் ஆரம்பத்திலிருந்து என்னை ஈடுபடுத்திய வைத்திய பாத்திரத்தில் அங்கீகரிக்கப்படாத ஆரம்பம் அத்தெரிவின் போது அடையாளமிடப்பட்டிருந்தது. எனது அதிர்ஷ்டத்திற்கோ அல்லது துரதிஷ்டத்திற்கோ எனது முதல் தர பெறுபேறுகள் கண்டி மாவட்டத்திற்கு உரிய புள்ளி மட்டத்தின் அடிப்படையில் கவனிக்கப்பட்டதால் எனது எதிர்பார்ப்பு சுக்குநூறாகியது. ஆனாலும் ஒருவழியை மட்டும் நோக்கி ஓடும் போட்டியில் அங்கத்தவர் ஆகாமல் என்னால் இருக்க முடியவில்லை. விளங்கும் வகையில் கூறின் எனக்கு 2ம் தடவையும் உயர் தர பரீட்சைக்கு தோற்ற வேண்டி ஏற்பட்டது. 2ம் தடவையும் கிடைத்த எதிர்பாரா பெறுபேற்றின் மூலம் நான் பெரிதும் அதைரியமாகிவிட்டேன். எவ்வாறிருப்பினும் ஏற்றுமதி விவசாய துறை மற்றும் விலங்கியல் விஞ்ஞான துறையின் கீழ் பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிக்க சந்தர்ப்பம் கிடைத்தது.

இதற்கிடையில் கணனி விஞ்ஞானத்திற்கு இருந்த அதிக கேள்வி மற்றும் அதிக தொழில் வாய்ப்புகள் காரணமாகவும் அத்துறையில் எனக்கு இருந்த ஆசை காரணமாகவும் உயர் கல்விக்காக கணனி மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை தேர்ந்தெடுக்க எனக்கு தேவையாக இருந்தது. எனினும் அரச பல்கலைக்கழகமொன்றில் இலவச கல்வி பெற தேவையான அடிப்படைத் தகைமை என்னிடம் காணப்படவில்லை. இந்நிலையில் உயர்தரத்தில் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காமையால் விண்ணப்பித்திருந்த மீள்திருத்த பெறுபேறுகள் எனக்கு புதிய எதிர்பார்ப்பை கொண்டுவந்து, கணனி விஞ்ஞான துறைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தை தந்தது.

ஆனாலும் அக்கால கட்டத்தில் போது பல்கலைக்கழகத்தில் அதற்கான போட்டிப் பரீட்சை முடிவடைந்திருந்தது. இந்நிலைமை என்னை மேலும் விழ வைத்தது. அச்சந்தர்ப்பத்தில் இருந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் எனக்கு சரியான முறையில் வழிகாட்டினார். கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப வெளிவாரி பட்டப்படிப்பில் நான் ஈடுபட அடிப்படை காரணமாகியவர் அவரேயாவார்.

எவ்வாறிருப்பினும் அதற்குத் தேவையான விரிவுரைகளில் கலந்து கொள்வது இலேசான காரியமாக இருக்கவில்லை. இன்று போல் அன்றும் விரிவுரைகளில் முன்னணியில் இருந்தது ESOFT நிறுவனமாகும். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கிய அரைப் புலமைப் பரிசில் குறித்து இன்றும் நான் ESOFT நிறுவனத்திற்கு என் இதய பூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வாறிருப்பினும் விரிவுரைகளுக்காக எனது பல்கலைக்கழக அமைவிடமான பதுளையில் இருந்து கண்டிக்கு வர வேண்டி ஏற்பட்டது அத்துடன் அதற்கான பணத்தை தேடிக் கொள்ளவும் சிரமமாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாவற்றையும் கருத்திற் கொண்டு எனது வாழ்க்கை குறித்த உச்சகட்ட மற்றும் நிலையான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு எனக்கு தேவைப்பட்டது. பல்கலைக்கழக கல்வியை இடை நிறுத்திவிட்டு தொழில் ஒன்றுக்கு செல்லவும் அதில் கிடைக்கும் பணத்தினால் தகவல் தொழில்நுட்பப் பட்டப்படிப்பினை தொடர்வதற்கும் முடிவெடுத்தேன். எனது முடிவு குறித்து பெற்றோருக்கு அவ்வளவாக விருப்பம் இருக்கவில்லை. நான் தொழில் ஒன்றுக்கு செல்வதற்கு அதுவும் காரணமாகியது. அத்துடன் எனக்காக 19 வருட காலம் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எனது பெற்றோருக்கு மேலும் 4 வருடங்கள் இலவச கல்வியினுள் மறைந்துள்ள பாரத்தை சுமத்திவிட எனக்கு தேவைப்படவில்லை.

எனது முடிவு எனக்குக் காட்டித் தந்த பயணம் மிகவும் சிரமமானதாக இருந்தாலும் அதன் தடைகள் அனைத்தையும் தாண்டி வெற்றியின் உச்சகட்டத்திற்கு செல்வதற்கு எனக்கு ஆற்றல் கிடைத்தது. அதாவது 2010ம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகவல் தொடர்பாடல் பட்டப்படிப்பின் வருடத்தின் முதல்தர சித்தியையும் சிறந்த திறமைக்காக வழங்கப்படும் கொழும்பு பல்கலைக்கழக கனணி கற்பித்தல் நிறுவனத்தின் (UCSC) ஸ்தாபகர் மறைந்த பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க நினைவாக தங்கப் பதக்கத்தையும் சிறந்த தனிநபர் செயற்திட்டத்திற்காக வழங்கப்படும் தங்கப்பதக்கத்தையும் உரித்தாக்கிக் கொண்டேன்.

சரியான நேரத்தில் எடுத்த சரியான முடிவும் சவால்மிக்க முடிவின் பின்னால் இருந்து என்னை வெற்றி கொள்ள வழிகாட்டிய ஆசிரிய ஆசிரியர்களும் இல்லா விடில் நானும் தொழிலற்றவர்களின் வரிசையில் சேர்ந்த மற்றுமோர் பட்டதாரியாக மாற இடமிருந்தது. எனது வயதை ஒத்தவர்கள் பட்டப்பின் படிப்பையும் நிறைவு செய்து கொண்டு தொழில் தேடி அலையும் போது நான்கு வருட தொழில்பயிற்சி மற்றும் தொழில் அனுபவத்துடன் தொழில் தேடவன்றி தொழில் வழங்க முடியுமான பதவியொன்றில் அதாவது (Esoft) கம்பஹா கிளையின் முகாமையாளராக நாட்டுக்கு சேவையாற்ற இயலுமானது சரியான முடிவினால் ஆகும். அத்தீர்மானங்களின் போதும், இச்சிரமமான பாதையை கடந்து வரும் போதும் எனக்கு அறிவுரை, புத்திமதி கூறிய அனைவருக்கும் எனது ஆசிரியர்களுக்கும் என்னை பெற்றுவளர்த்த பெற்றோர்களுக்கும் எனது இதயபூர்வ நன்றிகளை தெரிவிக்க விரும்புகிறேன்.

நீங்கள் கற்க வேண்டியது உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு முக்கியமாகத் தேவைப்படுவதையே. எனது வாழ்க்கையின் வெற்றிக்கு காரணமாகிய காலத்தின் தேவையாகிய தகவல் தொழில்நுட்பம் சந்தேகமின்றி முன்வைக்கக் கூடிய ஓர் பாடமாகும். இக்கடிதத்தை வாசகர் நீங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றிகொள்ள ஓர் ஆதாரமாக எடுத்துக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DiTEC

# Diploma in Information Technology

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப குறித்த அடிப்படை அறிவை கற்பதற்கு விருப்பமுள்ள உங்களுக்கு இது அரிய சந்தர்ப்பமாகும். புதிதாக கற்பவர்களுக்கே இப்பாடநெறி மிகப் பொருத்தமானது. பொறியியலாளர், மருத்துவர், கணக்காய்வாளர், முகாமைத்துவம் போன்ற துறைகளில் பிரவேசிக்க எதிர்பார்த்துள்ள மாணவர்களுக்குத் தேவையான தகவல் தொழிநுட்ப அறிவை இப்பாடநெறியில் பெற்றுக்கொள்ளலாம்.

## பாடநெறி உள்ளடக்கம்

- Unit 1 - IT Fundamentals
- Unit 2 - Microsoft Office Applications
- Unit 3 - PC Hardware
- Unit 4 - Networking Essentials
- Unit 5 - Internet, Email, and Web Designing
- Unit 6 - Graphics and Animation
- Unit 7 - Software Engineering
- Unit 8 - Programming with C#.net
- Unit 9 - Programming with Java
- Unit 10 - Web Applications Development with ASP.net
- Unit 11 - Software Development Project



பாடநெறிக்கான காலம் : 04 மாதங்கள்
பாடநெறி கட்டணம் : 21,500 ரூபா.
தவணைக் கட்டணம் : 6500, 5500, 5500, 4000

பாடநெறிக்காக இலவசமாக 02 புத்தகங்கள் வழங்கப்படும்



இப்பாடநெறி முடிவில் ESOFT நிறுவனம் வழங்கும் டிப்ளோமா சான்றிதழ், EDEXCEL நிறுவனம் வழங்கும் சர்வதேச மதிப்புள்ள சான்றிதழ் ஆகிய இரண்டும் வழங்கப்படும்

ESOFT




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DiSE Diploma in Software Engineering

இலங்கை இன்று உலகில் **Software Engineering** துறையில் முதன்மையிடத்தில் உள்ளது. இத்துறையில் முன்னேறிச் செல்வதற்கு எண்ணியிருக்கும் உங்களுக்கு இது குறித்த அடிப்படை விடயங்களைப் பற்றிய முழுமையான அறிவை இப்பாடநெறியினால் பெற்றுக்கொள்ள முடியும். இதனூடாக வர்த்தக உலகில் **Software Engineering, Systems Analysis & Design, Project Management, Testing & Development** போன்ற துறைகளில் தொழில் வேலைவாய்ப்பு, தேவையான நிபுணத்துவம் பெற்றுக்கொள்ள முடியும்.

## பாடநெறி உள்ளடக்கம்

- Unit 1 - Introduction to Software Engineering
- Unit 2 - Programming Concepts
- Unit 3 - OOAD using UML
- Unit 4 - Database concepts
- Unit 5 - Windows based applications development in C#
- Unit 6 - Windows based applications development in Java
- Unit 7 - Introduction to Project Management
- Unit 8 - Software Testing and Quality Management
- Unit 9 - Software Development Project



பாடநெறிக்கான காலம் : 06 மாதங்கள்
பாடநெறிக் கட்டணம் : 29,500 ரூபா.
தவணைக் கட்டணம் : 7500, 5500 × 4

பாடநெறிக்காக இலவசமாக 02 புத்தகங்கள் வழங்கப்படும்

C#.net அல்லது Java மொழியை உபயோகித்து மென்பொருள் உருவாக்கும் திறமையை பாடநெறி முடிவில் உங்களுக்கு அடைய முடியும்

ESOFT




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Diploma in Web Engineering

இன்றய போட்டிமிக்க உலகின் பொறியியல் துறையில் தொழில் தேடும் உங்களுக்கு **Web Designing, Web Development** என்ற துறைகளில் அதிகப்படியான வரவேற்பு உள்ளது. இப்பாடநெறியை பயில்வதன் மூலம் அத்தகைய தொழில் வாய்ப்புகளுக்கு சந்தர்ப்பங்கள் உதயமாவதுடன் உங்களுக்கு தனியாக ஓர் இணையத் தளம் நிர்மாணிக்கும் ஆற்றலும் கிடைக்கும். இதன் மூலம் தனக்கென ஓர் தொழில்வாய்பபை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

## பாடநெறி உள்ளடக்கம்

- Unit 1 - Introduction to Web Technologies
- Unit 2 - Multimedia Technologies on the web
- Unit 3 - Coding with HTML
- Unit 4 - Web Designing Tools (DreamWeaver, Photoshop, Flash)
- Unit 5 - Programming with JavaScript
- Unit 6 - Fundamentals of PHP
- Unit 7 - Advanced PHP Concepts
- Unit 8 - File handling in PHP
- Unit 9 - Using Extensions and Image Manipulation
- Unit 10 - Working with mySQL Databases
- Unit 11 - Web Development Project



பாடநெறிக்கான காலம் : 06 மாதங்கள்
பாடநெறிக் கட்டணம் : 29,500 ரூபா.
தவணைக் கட்டணம் : 7500, 5500 × 4

பாடநெறிக்காக இலவசமாக 02 புத்தகங்கள் வழங்கப்படும்

PHP தொழிநுட்பம் உபயோகித்து தரமான இணையத் தளத்தை நிர்மாணிக்கக்கூடிய ஆற்றலை பாடநெறி இறுதியில் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# DiCA Diploma in Computerized Accounting

இன்றைய வியாபார உலகில் முடிவுகள் எடுப்பதற்காக சரியான தகவல்களை தகவல் தொழிநுட்பத்தை பயன்படுத்தி பெற்றுக்கொள்ளுதல் மிக முக்கியமானதாகும். இதன் காரணமாக அநேகமான நிறுவனங்கள் கணனி மென்பொருட்களை பாவித்து தமது நிறுவனத்தின் கணக்கு பதிதல் வேலையை மேற்கொள்கின்றது. இதற்காக பயன்படும் மிகவும் பிரபல்யமான எல்லா மென்பொருட்களும் இப்பாடநெறியில் உள்ளடங்குகின்றது.

## பாடநெறி உள்ளடக்கம்

- MYOB
- Quick Books
- ACCPAC
- SAGE
- Peachtree

* Cash Book (Bank book, Petty cash and Day book)
* General Ledger, Journal
* Bank Reconciliation Book
* Debtors and Creditors Ledger
* Sales and Purchase Registers
* Fixed Asset Registers
* Stock and Inventory
* Profit and Loss Accounts
* Balance Sheets
* Ratios, Comparisons
* Forecasts, Budgets and Variances



பாடநெறிக்கான காலம் : 05 மாதங்கள்
பாடநெறிக் கட்டணம் : 17,000 ரூபா.
தவணைக் கட்டணம் : 7000, 5000 x 2

பாடநெறிக்காக இலவசமாக 02 புத்தகங்கள் வழங்கப்படும்

கல்வி அமைச்சின் செயற்திட்டமொன்றிக்கும் இப்பாடநெறியை தேர்ந்தெடுத்திருப்பது விஷேட அம்சமாகும்.

ESOFT



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**bcs** The Chartered Institute for IT

# Higher Education Qualifications (HEQ)

Leading to Chartered Status

தகவல் தொழிநுட்பம் குறித்த அதிகாரம் பெற்ற நிறுவனமான (BCS - The Charted Institue for IT) மூலம் வழங்கப்படும் இத்தகைமை பிரித்தானிய கௌரவ பட்டபடிப்பிற்கு சமனானது. 2 வருடங்களுக்கு குறைந்த காலத்தினுள் இதனை பூரணப்படுத்தி பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் இதன் மூலம் உங்களுக்கு கிடைக்கும்.



**3 கட்டங்களையும் செயற்திட்டமொன்றயும் உள்ளடக்கியது**

### முதல் கட்டம் - Certificate Level
பாடநெறிக் கட்டணம் : ரூபா 25,000 பரீட்சைக் கட்டணம் : £ 120

### இரண்டாம் கட்டம் - Diploma Level
பாடநெறிக் கட்டணம் : ரூபா 38,000 பரீட்சைக் கட்டணம் : £ 180

### மூன்றாம் கட்டம் - Gradute Diploma Level
பாடநெறிக் கட்டணம் : ரூபா 52,000 பரீட்சைக் கட்டணம் : £ 340

### செயற்திட்ட கட்டம் - Professional Project
பாடநெறிக் கட்டணம் : ரூபா 15,000 பரீட்சைக் கட்டணம் : £ 105

பரீட்சை : மார்ச் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் வருடத்திற்கு இரு தடவைகள் நடைபெறும்.

## பாடநெறியின் சிறப்பம்சங்கள்

- பிரித்தானியாவின் கௌரவ பட்டப்படிப்பிற்கு சமனானது.
- அங்கிகாரம் பெற்ற தகவல் தொழிநுட்பவியலாளர் என பதிவாகுவதற்கான சந்தர்ப்பம்.
- 2 வருடங்களுக்குள் பூர்த்தி செய்யக்கூடியமை.
- உள்நாட்டு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளமை.
- பட்டப்பின் படிப்பிற்கு அனுமதி பெறுவதற்கான தகைமையாகும்.

## Your Career Path

M.Sc / MIT / MBA

↑

BCS PGD Level

↑

BCS Diploma Level

↑

BCS Certificate Level

↑

A/L or O/L

சாதாரண தரத்தின் பின்னரும் இப் பட்டப்படிப்பை ஆரம்பிக்கலாம்

ESOFT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIT

# Bachelor of Information Technology (UCSC)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் (UCSC) மூலம் வழங்கப்படும் 3 ஆண்டு கால வெளிவாரி பட்டப்படிப்பாகும் கா.பொ.த. உ.தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நேரடியாக இப்பாடநெறியை பயில முடியுமாவதுடன், உ.தரத்தில் சித்தியடையாதவர்கள் FIT பாடநெறியின் ஊடாக இதனை தொடரலாம்.



*** பாடநெறி உள்ளடக்கம்**

| | |
|---|---|
| முதல் வருடம் | : 2 அரை வருடங்கள் (2 Semesters) |
| இரண்டாம் வருடம் | : 2 அரை வருடங்கள் (2 Semesters) |
| மூன்றாம் வருடம் | : 2 அரை வருடங்கள் (2 Semesters) |

* பாடநெறிக் கட்டணம் : **28,000** (அரை வருட காலம்)

* பரீட்சைக் கட்டணம் : **45,000** (அண்ணளவாக)

* ஆட்சேர்ப்பு : மே முதல் செப்டெம்பர் வரை

## BIT-Plus Programme

BIT பட்டப்படிப்பு பாடங்களை மிகுந்த செயல்முறையுடன் பயிலும் சந்தர்ப்பம் மற்றும் மேலதிக சான்றிதழ்கள் இதன் மூலம் கிடைக்கும்

## BIT பட்டப்படிப்பின் சிறப்பம்சங்கள்

- இலங்கையில் மிகக் குறைந்த முதலீட்டில் பெறக்கூடிய தகவல் தொழிநுட்பப் பட்டப் படிப்பு.
- அதி நவீன தொழிநுட்பத்தை பயிலும் வாய்ப்பு.
- கணனித் துறையில் BIT பட்டதாரிகளுக்கு உயர்ந்த வரவேற்பு கிடைக்கின்றமை.
- FIT பாடநெறி மூலம் சாதாரண தரத்திலிருந்து கற்கும் வாய்ப்பு.

## BIT ற்கான 5 வருட சிறந்த பெறுபேறுகள் எங்களிடமிருந்து (Batch Tops)

2008



Ravith

2009



Danuka

2010



Udara

2011



Dasun

2012



Shavindra

ESOFT



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# BIT@UoM Bachelor of Information Technology (External)

University of Moratuwa



மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் மூன்று வருட வெளிவாரி பட்டப்படிப்பாகும். க.பொ.த உயர் தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு இந்த பட்டப்படிப்பினை தொடர முடியும். அதி உன்னதமான விடயப் பரப்பினை கற்கக் கூடிய வாய்ப்பு இந்த 3 வருடங்களில் உங்களுக்கு கிடைக்கும்.

*** பாடநெறி உள்ளடக்கம்**


முதல் வருடம் : 2 அரை வருடங்கள் (2 Semesters)
பாடநெறிக் கட்டணம் ரூபா 77,250

இரண்டாம் வருடம் : 2 அரை வருடங்கள் (2 Semesters)
பாடநெறிக் கட்டணம் ரூபா 63,250

மூன்றாம் வருடம் : 2 அரை வருடங்கள் (2 Semesters)
பாடநெறிக் கட்டணம் ரூபா 57,500

* பரீட்சைக் கட்டணம் ரூபா 130,000
(3 தவணைகளில் செலுத்தலாம்)

* பதிவுகள் : ஜனவரி முதல் பெப்ரவரி வரை.




## இப்பட்டப்படிப்பின் சிறப்பம்சங்கள்


- மிகவும் நவீன தொழில்நுட்பத்தை பயிலும் வாய்ப்பு.
- இத்துறையில் இப்பட்டப்படிப்பிற்கு மிக அதிக வரவேற்பு காணப்படுகின்றமை.
- பொறியியற்துறை கற்றலுக்கு மிகவும் வரவேற்புடைய மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் பட்டம் கிடைத்தல்.
- இப்பட்டப்படிப்பினை பயில ESOFT நிறுவனத்தினில் மட்டுமே வாய்ப்பு கிடைக்கின்றன.
- கொழும்பு, கண்டி, குருணாகல், காலி, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய 6 கிளைகளில் மட்டும் இப்பட்டப்படிப்பினை பயில முடியும்.

ESOFT



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# bucks new university



## தகவல் தொழிநுட்ப பிரித்தானிய கௌரவ பட்டப்படிப்பு

### B.Sc. (Hons) in Computing

முதல் இரு வருட **EDEXCEL HND** பாடநெறி மூலம்
பாடநெறிக் கட்டணம் ரூபா **160,000** பரீட்சைக் கட்டணம் ரூபா **40,000**

இறுதி வருடம் Top Up Degree
பாடநெறிக் கட்டணம் ரூபா **150,000** பரீட்சைக் கட்டணம் **£ 1,300**

**பிரித்தானிய பட்டப்படிப்பொன்றை இலங்கையிலேயே பூரணப்படுத்த முடியும்**

**மொத்த முதலீடு ரூபா 585,000**

## வியாபார முகாமைத்துவப் பிரித்தானிய கௌரவப் பட்டப்படிப்பு

### B.A. (Hons) in Business & Finance

முதல் இரு வருட EDEXCEL HND பாடநெறி மூலம்
பாடநெறி கட்டணம் ரூபா **160,000** பரீட்ச்சை கட்டணம் ரூபா **40,000**

இறுதி வருடம் Top Up Degree
பாடநெறிக் கட்டணம் ரூபா **160,000** பரீட்சைக் கட்டணம் **£ 1,250**


### பாடநெறியின் சிறப்பம்சங்கள்

- முதல் 2 வருடங்களுக்கும் பரீட்சை இல்லை (அனைத்து மதிப்பீடுகளும் செயற்திட்டம் மூலம் நடைபெறும்)
- குறைந்த காலத்தில் பிரித்தானிய பட்டப்படிப்பொன்றிக்கு உரிமையாளராகலாம்.
- பிரித்தானிய பட்டப்படிப்பொன்றை பெற்றுக் கொள்ளக்கூடிய இலகுவான வழி
- சாதாரண தரத்தின் மூலம் அடிப்படை டிப்ளோமா ஒன்றினூடாக பட்டப்படிப்பிற்கு பிரவேசிக்க வாய்ப்பு
- தேவையெனின் இறுதியாண்டை பிரித்தானியாவில் சென்று பயில முடியும்.

ESOFT

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Advancement Chart (உங்கள் எதிர்கால பயணப் பாதை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10% Discount

பதிவு செய்யும் போது இதனை சமர்ப்பிக்கவும்

உங்களுக்கு சேவை வழங்கும் இலங்கையின் மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு

**பட்டப்படிப்பு மட்டத்திலான பாடநெறிகள் நடைபெறும் கிளைகள்**

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு | 011-2553883 | கம்பஹா | 033-7388051 |
| கண்டி | 081-2204400 | அநுராதபுரம் | 025-5670513 |
| நுகேகொட | 011-7555571 | பண்டாரவெல | 057-2224042 |
| குருணாகல் | 037-2223945 | கிரிபத்கொட | 011-7555535 |
| நீர்கொழும்பு | 031-2227990 | யாழ்ப்பாணம் | 021-2224142 |
| மாத்தறை | 041-2233550 | மட்டக்களப்பு | 065-7200070 |
| காலி | 091-7501125 | மாத்தளை | 066-7501122 |

**ஆரம்ப மட்டத்தில் பாடநெறிகள் நடைபெறும் கிளைகள்**

| | | | |
|---|---|---|---|
| கிளிநொச்சி | 021-2285444 | எம்பிலிபிட்டி | 047-2261845 |
| கல்முனை | 067-3673555 | நெல்லியடி | 021-2264940 |
| வத்தளை | 011-7917172 | பொலன்னறுவ | 027-7501130 |
| கேகாலை | 035-2222045 | இரத்தினபுரி | 045-2230005 |
| ஹட்டன் | 051-7388053 | வவுனியா | 024-2226060 |
| ஹோமாகம | 011-2891675 | நிட்டம்புவ | 033-3998327 |
| ஹம்பந்தோட்டை | 047-2220940 | வென்னப்புவ | 031-2252520 |
| பத்தரமுள்ள | 011-4932293 | | |
| ஜா-எல | 011-2229766 | | |
| பிலியந்தல | 011-2608672 | | |
| குளியாபிட்டி | 037-2284621 | | |
| மன்னார் | 023-2223377 | | |
| மினுவன்கொட | 011-2280770 | | |
| மொனராகல | 055-2276306 | | |
| நாவலப்பிட்டி | 081-5633725 | | |




ESOFT

The Leader in Professional ICT Education

*Shaping Lives... Creating Futures*

ESOFT Computer Studies (Pvt) Ltd இல. 235, காலி வீதி, கொழும்பு 04. தொலை: 011-7 55 55 45

bcs Accredited Course Provider

edexcel Approved Centre

An ISO 9001:2008 Certified Company

PROMETRIC TEST CENTER

Email : info@esoft.lk

Web: www.esoft.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org